2005 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கின்றேன்.

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு)

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே இந்தச் சட்டமுன்வடிவை காங்கிரஸ் கட்சியின் சார்பிலே எதிர்க்கிறேன்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்க்கிறோம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2005 ஏப்ரல் 12

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை பாட்டாளி மக்கள் கட்சி அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறது.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கத்தினுடைய தனி அலுவலர்கள் பதவிக் காலத்தை ஓராண்டு நீட்டிக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கிறது. உடனடியாகத் தேர்தல் நடத்தப்படவேண்டும். அலுவலர்கள் பதவிக் காலம் நீட்டிக்கப்படக் கூடாது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறது, அவ்வளவுதான் கருத்தெல்லாம்.

திரு. ஜி. பழனிசாமி: என்பதை வலியுறுத்தி அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

முற்பகல் 10-40

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** தனி அலுவலர் பதவிக் காலத்தை நீட்டிக்கச் செய்கிற இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

2005 ஏப்ரல் 12]

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) **கோரிக்கை எண் 25–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**

(ஆ) **கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா**

(இ) **கோரிக்கை எண் 27–செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–செய்தி மற்றும் விளம்பரம்**

} தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 11–4–2005 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதமும் வாக்கெடுப்பும். திரு. உலகரட்சகன். நீங்கள் எப்போதுமே விதிகளுக்குக் கட்டுப்படக்கூடியவர். 10 மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

***திரு. பி.எஸ். உலகரட்சகன்:** வள்ளுவரின் சொல்லுக்கு ஏற்ப, திருவள்ளுவரின் சொல்லுக்கு ஏற்ப, 4 ஆண்டுக் காலமாக எங்களின் பேராதரவோடு பேரவையை நடத்திக் கொண்டிருக்கும் பேரவையின் பெருந்தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது உரையாற்றுவதற்காகப் பணித்தமைக்கு, தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, என் இனமானக் காவலர், தமிழ்க்குடிதாங்கி மருத்துவர் ஐயா அவர்களுக்கும், அவரது துணைவியார் திருமதி சரஸ்வதி அம்மா அவர்களுக்கும், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் சின்னய்யா அவர்களுக்கும், எங்களுடைய தலைவர், சட்டமன்றத்தின் தலைவரும், பெண்ணாகரத்தின் சட்டமன்ற உறுப்பினருமாகிய அன்புச் சகோதரர் கொ.க. மணி அவர்களுக்கும், துணைத் தலைவர் ஐ. கணேசன் அவர்களுக்கும் நன்றி மலர்களை மாலையாகத் தொடுத்துக் காணிக்கையாக்கி, இந்த மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைச் சொல்கிறேன்.